# பெருந்தொற்று எனும் நிழல்

பெருந்தொற்றுக் காலத்தின் போது வீட்டு வன்முறையினை அடையாளப்படுத்துவதற்கான பரப்புரை ஆவணம்



Kingdom of the Netherlands

Centre for Equality and Justice

# பெருந்தொற்று எனும் நிழல்

பெருந்தொற்றுக் காலத்தின் போது வீட்டு வன்முறையினை அடையாளப்படுத்துவதற்கான பரப்புரை ஆவணம்

நவம்பர் 2022

இலங்கையில் கொவிட்-19 பெருந்தொற்று பிற அவசரநிலைகள் மற்றும் தேசிய நெருக்கடிகளின் பின்னணியில் எழும் வீட்டு வன்முறைச் சம்பவங்களுக்கு பால்நிலை-கூருணர்வுடன் எதிர்வினையாற்றுவதற்கான தேவையை இந்த ஆவணம் பரிந்துரைக்கின்றது. இந்தத் தேவையை ஆதாரப்படுத்துவதற்கு, பல்வேறுபட்ட, ஆனாலும் ஒன்றிணைக்கப்பட்ட, பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த வளவாளர்களுடன் நேர்காணல் தொடர் ஒன்று முன்னெடுக்கப்பட்டதுடன், மறுசீரமைப்புக்களுக்குப் பரிந்துரைகளை முன்வைப்பதற்கான ஆய்வு ஒன்றும் உருவாக்கப்பட்டது. பின்வரும் பிரிவுகள், ஆய்வு முன்னெடுக்கப்பட்ட சூழ்நிலைகளை அறிமுகம் செய்வதுடன், வன்முறையைத் தூண்டிய காரணிகள் மற்றும் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள் உட்பட ஒட்டுமொத்தக் கண்டுபிடிப்பு பற்றிய சாராம்சத்தையும் வழங்கும். மேலும், ஆலோசிக்கப்படும் பரிந்துரைகளையும் சுட்டிக்காட்டும்.

# அறிமுகம்

நவீன வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் பாதிக்கும் பல்வேறு சவால்களை கொவிட்-19 பெருந்தொற்று ஏற்படுத்தியுள்ளது. உதாரணமாக, தேசிய பொருளாதாரத்திலும், பொதுச் சுகாதாரத்திலும் உள்ள பிரச்சனைகள் மீதுள்ள கவனத்தை ஈர்க்கிறது. எவ்வாறாயினும், பெண்களை-பிரதானப்படுத்திய பிரச்சினைகளில் பெருந்தொற்றின் தாக்கமானது இந்தத் தொடர்ச்சியான நெருக்கடியின் மத்தியிலும் ஒரு புற கரிசனையாகவும், கவனம் செலுத்தப்படாமலும் ஒதுக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், பெருந்தொற்றுக் காலப்பகுதியில் உலகம் முழுவதிலும் வீட்டு வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பினை உலகளாவிய புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. அதன் தொடர்ச்சியாக, வீட்டு வன்முறை (பால்நிலை அடிப்படையிலான வன்முறை என்ற வரம்பிற்குள் வரக்கூடியவை) என்பது "*மனித உரிமைகள் கரிசனையாக*" குறிப்பிடப்பட்டுள்ளது.[1] மார்ச் 2020 முதல், இலங்கையும் வீட்டு வன்முறை சார்ந்த சம்பவங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளது. இந்தவிடயம் தொடர்பில் பரவலான ஆய்வு/கற்கை முன்னெடுக்கப்படாத போதிலும், நிகழ்வுசார் ஆதாரங்கள் இந்த அனுமானத்தை போதியளவில் ஆதரிப்பவையாக உள்ளன.

இந்த ஆவணத்தைத் தயாரிப்பதில், பெருந்தொற்றுக் காலத்தில் பெண்கள் மற்றும் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான முழுமையான உதவிச் சேவையை செயற்படுத்திய ***பெண்கள் தொடர்பான தேசிய குழு***[2] மற்றும் ***ஆதரவு நாடும் பெண்கள் அமைப்பு***[3] போன்ற அமைப்புகளை ஆவணத் தயாரிப்பாளர்கள் நாடினர். இந்த இரண்டு அமைப்புகளும் கொவிட்-19 பெருந்தொற்றுக் காலப்பகுதியில் பெண்கள் மற்றும் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கென முழுமையாக இயங்கும் உதவிச் சேவையை இயக்கின. இந்தக் காலப்பகுதியில் வீட்டு வன்முறைகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு வீதத்தினை மேற்கூறப்பட்ட இரண்டு அமைப்புக்களும் வழங்கிய ஆதாரங்கள் காட்டின. உதாரணமாக, '**1938**' உதவிச் சேவையைக் கொண்டுநடத்தும் ***பெண்கள் தொடர்பான தேசிய*** குழுவானது, 2020ஆம் ஆண்டில் மாத்திரம் **1215** வீட்டு வன்முறைச் சம்பவங்கள் பதிவானதாக உறுதி செய்தது. 2021ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரித்ததுடன் பெறப்பட்ட **4976** அழைப்புக்களில் **3489** அழைப்புக்கள் வீட்டு வன்முறையுடன் சம்பந்தப்பட்டதாக இருந்தன. பெரும்பாலான வீட்டு வன்முறைச் சம்பவங்கள் பதிவாகாத நிலையில், நாட்டில் இடம்பெற்ற வீட்டு வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை மற்றும் சதவீத்தினை இந்த அளவுகள் குறிப்பிடாத போதிலும், பெருந்தொற்றின் பின்னால் நிகழக்கூடிய வீட்டு வன்முறைகளினை பிரதிபலிக்கக் கூடியதாக அவை உள்ளன.

இலங்கையின் சட்டக் கட்டமைப்பானது வீட்டு வன்முறை தொடர்பான சட்டங்களை நீண்டகாலமாக உள்ளடக்கியிருக்கின்றது. 2005ஆம் ஆண்டில் வீட்டு வன்முறையைத் தடுப்பதற்கான சட்டம்[4] இயற்றப்பட்டது. வீட்டிற்குள் முன்னெடுக்கப்படும் வன்முறைக் குற்றச் செயல்களை வீட்டு வன்முறையைத் தடுப்பதற்கான சட்டம் குற்றமாகக் குறிப்பிடுவதுடன், இடைக்காலப் பாதுகாப்பு

---

[1] கிம் ஸ்லோட் மற்றும் கெர்ரி கத்பேர்ட், 'வீட்டு வன்முறையும், பாலியல் துஷ்பிரயோகமும்: பெண்களின் மனித உரிமைகள் தகவல் படிவம்' <வாழ்க்கைத் துணையினால் மேற்கொள்ளப்படும் பாலியல் துஷ்பிரயோகம்: மனித உரிமைகள் தகவல் படிவம் (musc.edu)>, அணுகப்பட்டது 2 ஒகஸ்ட் 2022; 'பால்நிலை அடிப்படையிலான வன்முறையும், மனித உரிமைகளும்' (ஐரோப்பிய பேரவைத் தளம்) <பால்நிலை அடிப்படையிலான வன்முறையும், மனித உரிமைகளும் (coe.int)> அணுகப்பட்டது 2 ஒகஸ்ட் 2022; 'பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் வகைகள்' (ஐரோப்பிய பேரவைத் தளம்) <பால்நிலை அடிப்படையிலான வன்முறையும் மனித உரிமைகளும் (coe.int)> அணுகப்பட்டது 2 ஒகஸ்ட் 2022.

[2] பெண்கள் தொடர்பான தேசிய குழு என்பது மகளிர் விவகாரங்கள் தொடர்பான தேசிய பொறியமைப்பின் ஒரு அங்கமாகும்.

[3] ஆதரவு நாடும் பெண்கள் அமைப்பு என்பது இலங்கையில் உள்ள ஒரு அரச சார்பற்ற நிறுவனமாகும்.

[4] 2005ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க வீட்டு வன்முறையைத் தடுப்பதற்கான சட்டம்.

உத்தரவுகள், பாதுகாப்பு உத்தரவுகள் மற்றும் துணை உத்தரவுகள் ஊடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத்திற்கான வழிகளையும் வழங்குகின்றது. எவ்வாறாயினும், வீட்டு வன்முறையைத் தடுப்பதற்கான சட்டம் என்பது குறைபாடுடையது எனவும், அமுல்படுத்தல் மற்றும் நடைமுறையில் பல்வேறு குறைபாடுகளைக் கொண்டுள்ளது எனவும் பல சட்டத்தரணிகள் நம்புகின்றனர். மேலதிகமாக, வீட்டு வன்முறையைத் தடுப்பதற்கான சட்டம் என்பது பால்நிலைக் கூருணர்வு மிக்கது என்பதற்குப் பதிலாக, பால்நிலை தொடர்பாக நடுநிலையானதாகக் காணப்படுகிறது. குறிப்பாக, வீட்டு வன்முறைச் சம்பவங்களில் இருந்து பாதுகாப்பு மற்றும் தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள பிரதான பங்குதாரர்கள் குறிப்பிட்ட அவதானிப்புக்கள், இலங்கையில் தற்போதுள்ள உட்கட்டமைப்பிற்குள் நடைமுறைசார்ந்த மற்றும் சட்ட ரீதியான குறைபாடுகளைத் தெளிவாக விளக்குகின்றன.

# 1. ஆய்வு/கற்கை முடிவுகள்

## 1.1 வன்முறைக்கான காரணிகள்

கொவிட்-19 பெருந்தொற்றானது, வீட்டு வன்முறையின் அதிகரிப்புக்கான நுணுக்கமான மூலக் காரணங்களை உருவாக்கும் தூண்டுதல் காரணியாக இருப்பதை ஆய்வு முடிவுகள் தெரிவித்தன. பெருந்தொற்றின் போதும், அதன் பின்னரும் வீட்டு வன்முறையைத் தூண்டுவனவாகப் பின்வரும் காரணிகள் அடையாளம் காணப்பட்டன:



### 1. ஊரடங்குச் சட்ட அமுலாக்கத்தால் அதிகரித்த மன அழுத்தம் மற்றும் விரக்தி

- நீடிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டக் காலத்தினால் பல்வேறு பொருளாதார பின்புலங்களைக் கொண்ட குடும்பங்களுக்குள் ஏற்பட்ட நிதிசார் கட்டுப்பாடுகள்.
- பெருந்தொற்றின் ஆரம்பக் காலப்பகுதியில் வேலைகளில் இருந்து பலர் நீக்கப்பட்டதால் வேலைவாய்ப்பின்மை மற்றும் வருமான இழப்புக்கு உள்ளாகினர்.
- பெரும்பாலான குடும்பங்களில் நிதிசார் கட்டுப்பாடுகள் ஆண்களால் சுமக்கப்பட்டதால் கடுமையான விரக்தி மற்றும் மனப் பயத்திற்கு வழிகோலியதுடன், வன்முறைச் சம்பவங்களையும் தூண்டியது.



### 2. பெருந்தொற்றின் போது சேவை வழங்குநர்களை அணுகுவதற்காக காணப்பட்ட வரையறுக்கப்பட்ட நிலை

- வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட சமூக மற்றும் முறைசார் வலையமைப்புக்கள் பெருந்தொற்றின் காரணமாகப் பாதிக்கப்பட்டன.
- போக்குவரத்திற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக சேவை வழங்குநர்கள் உட்பட பொலிஸ் உத்தியோகத்தர்கள், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பாதுகாப்பான இல்லங்களை அணுகும் வசதி பாதிக்கப்பட்டது.
- இந்தக் காலத்தின் போது போதியளவு நிதியின்மை காரணமாக, அரச-சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்ட உதவியை அணுகும் வசதியும் மட்டுப்படுத்தப்பட்டது.
- பெருந்தொற்று உச்சத்தில் இருந்த காலப்பகுதியில் இலகுவில்



நாடக்கூடிய சேவை வழங்குநராகச் சுகாதாரத் துறை இருந்ததாக துறைசாரந்த நிபுணர்களுடனான நேர்காணல்கள் உறுதிப்படுத்தின. எவ்வாறாயினும், அனைத்து வளங்களும், மனிதவளங்களும் கொவிட்-19இனை எதிர்கொள்வதற்காகப் பயன்படுத்தப்பட்டதுடன், பெருந்தொற்றின் பால்நிலை அடிப்படையிலான தாக்கங்கள் மீண்டும் ஒதுக்கி வைக்கப்பட்டது.

- இதனால், பெரும்பாலான வீட்டு வன்முறைச் சம்பவங்கள் பதிவுசெய்யப்படாமல், பாதிக்கப்பட்டவர்கள் அமைதியாக இருப்பதற்கு வழிகோலியது.



### 3. வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கு வினைத்திறன் மிக்க கட்டமைப்பு ஒன்று இன்மை

- பெண்களின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கும், வன்முறையைத் தடுப்பதற்கும் ஏற்கனவே உருவாக்கப்பட்ட உட்கட்டமைப்பானது பெருந்தொற்றின் போது வினைத்திறனுடன் செயற்படவில்லை.
- அவசரத் தொலைபேசி உதவிச் சேவைகள் உள்ளடங்கலாக, மாற்றுச் சேவை வழங்குநர்களுக்கு பாரியளவில் வீட்டு வன்முறைச் சம்பவங்களைக் கையாள்வதற்கான பயிற்சி இருக்கவில்லை.
- எனவே, உதவிக்கான இத்தகைய மாற்று வழிகள் தொடர்பில் பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும், பெருந்தொற்றின் போது சேவை வழங்குநர்களின் பற்றாக்குறை மற்றும் வினைத்திறன் இன்மையின் காரணமாக, பெரும்பாலான பெண்கள் உதவியை அணுகுவதற்கு தவறியதுடன், வன்முறையைத் தாங்கிக் கொள்வதற்குத் தீர்மானித்தனர்.




### 4. போட்டியிடும் நோக்கங்கள்

- பால்நிலை அடிப்படையிலான வன்முறை சார்ந்த விடயங்கள் பின் தள்ளப்பட்டு, மிகவும் முக்கியமான பிரச்சினையாக பெருந்தொற்று முன்னிலைப்படுத்தப்பட்டது.
- தொடர்ச்சியாக, கிடைக்கக் கூடியதாக இருந்த அனைத்து வளங்களும் பெருந்தொற்றினை எதிர்கொள்வதற்கு மாற்றப்பட்டதுடன், வீட்டு வன்முறை என்பது புறகரிசனையாக மாறியது.



### 5. பால்நிலை அடிப்படையிலான மாறாநிலையிலான கண்ணோட்டம்

- ஆணாதிக்கப் பழக்கவழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகளில் வேரூன்றிய குடும்பங்கள் பால்நிலை வகிபாகங்கள் பற்றிய பாரம்பரியமான புரிதலை ஏற்றுக்கொண்டு, பெண்கள் மீது ஆண்கள் ஆதிக்கம் செலுத்துகின்றார்கள்.
- இந்த நம்பிக்கைகள் வாழ்க்கைத்துணை உறவில் சமனற்ற அதிகாரத்தை உருவாக்கியதுடன், தமது குடும்பக் கட்டமைப்புக்குள் பெண்கள் மீது துஷ்பிரயோகம் புரிபவர்களாக இருப்பதற்கு ஆண்களுக்கு அதிகாரமளித்தது.



- பெரும்பாலான சம்பவங்களில், இந்த வேரூன்றிய அதிகார ஏற்றத்தாழ்வு என்பது, பெண்கள் துஷ்பிரயோகத்தை ஏற்றுக்கொண்டு அமைதியாக துன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது.
- வன்முறைச் சம்பவங்களை முறையிடுவது தவறானது என பெரும்பாலான பெண்கள் நம்பியதுடன், தமது துஷ்பிரயோகம் மேற்கொள்ளும் வாழ்க்கைத் துணையைப் பொறுத்துக் கொண்டுசெல்வதனைத் தெரிவு செய்தனர்.



### 6. சட்டவிரோத மதுபானத்திற்கான அணுகல்

- வன்முறையைத் தூண்டுவதில் பிரதான காரணியாக சட்டவிரோத மதுபானத்திற்கான அணுகல் சுட்டிக்காட்டப்பட்டது.
- மதுபானத்தைக் கொள்வனவு செய்வதற்கு சட்டபூர்வமான வழி இன்மையால், பெரும்பாலான ஆண்கள் சட்டவிரோத மதுபானத்திற்கான மாற்றுவழிகளை நாடினர்.
- வீட்டில் மதுபானம் அருந்தப்படுகின்றமை பெரும்பாலும் பெண்கள் பாதிக்கப்படுவதற்கான காரணமாக அமைந்தது.




## 1.2 குறைபாடுகள்



### 1. பெண்களுக்கான அதிகாரசபை/ஆணைக்குழுவின் பற்றாக்குறை

- பெண்களின் விவகாரங்களை அடையாளப்படுத்துவதற்கான போதிய சட்ட இயலுமையுடன் முறைசார் அரச பொறியமைப்பிலான அதிகாரசபை அல்லது ஆணைக்குழு ஒன்று இல்லை.



### 2. சேவை வழங்குநர்களை அணுகும் வசதிக்கான பற்றாக்குறை

- தீவிரமான முடக்கம் மற்றும் ஊரடங்கு விதிமுறைகள் வெளியுலகிற்கான அணுகும் வசதியைக் கட்டுப்படுத்தின.
- இதன் விளைவாக, வீட்டு வன்முறைக் குற்றவாளிகள் வீடுகளில் நீண்ட காலம் முடங்கி இருந்த பாதிக்கப்பட்டவர்களை துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்குவதற்கு அதிக சந்தர்ப்பங்களை கொண்டிருந்தனர்.
- மேலதிகமாக, வீட்டு வன்முறைச் சம்பவங்களைப் பதிவு செய்வதற்கோ அல்லது தமது வீடுகளில் இருந்து முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கோ தொடர்பாடலுக்கான சுயாதீன வழிகளைப் பெண்கள் கொண்டிருக்கவில்லை.
- சேவை வழங்குநர்களை அணுகுவதற்கான "பாதுகாப்பான தொலைபேசி" ஒன்றுக்கான அணுகும் வசதியைப் பெரும்பாலான பெண்கள் கொண்டிருக்கவில்லை. அத்துடன், தம்மைத் துஷ்பிரயோகம் செய்பவர்களின் தொலைபேசியைப் பயன்படுத்தக் கட்டாயப்படுத்தப்பட்டனர். துஷ்பிரயோகத்துக்குக் காரணமானவர்கள் அது தொடர்பில் கண்டறியும் சந்தர்ப்பங்களில் வன்முறைக்கான ஆபத்தை இது மேலும் அதிகரித்தது.
- சேவை வழங்குநர்களை அணுகுவதில் வெற்றி பெற்ற பாதிக்கப்பட்டவர்கள், தாம் பெற்ற சேவையின் தரம் மிகவும் மோசமானதாக இருந்ததாகக் குறிப்பிட்டனர்.



### 3. திறன் பற்றாக்குறை

- பல்வேறு துறைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கொவிட்-19 பெருந்தொற்று ஆபத்தை அடையாளப்படுத்துவது தொடர்பிலும், இந்தத் துறைகளில் அதன் தாக்கம் தொடர்பிலும் தமது வளங்களை இலக்கு வைத்ததன் காரணமாக வீட்டு வன்முறையை அடையாளப்படுத்துவதில் வேறுபட்ட பங்குதாரர்கள் மத்தியில் ஒருங்கிணைப்பு மற்றும் இயலுமை பற்றாக்குறையானது பெருந்தொற்றின் போது அதிகரித்தது.
- நெருக்கடியை எதிர்கொள்வதற்கு மற்றும் வினைத்திறனுடன் கையாள்வதற்கு முன்னிலை வகிக்கும் பணியாளர்களுக்கு போதியளவு பயிற்சி வழங்கப்படாமையால் பெண்கள் உட்பட இலகுவில் பாதிப்புக்குள்ளாகக் கூடிய குழுக்கள் வரையறுக்கப்பட்ட சேவைகளைப் பெறுவதற்குக் காரணமாகின்றது.



### 4. இலங்கையில் வீட்டு வன்முறை தொடர்பில் உறுதியான தரவுகளின் பற்றாக்குறை

- வீட்டு வன்முறையைக் கண்காணிப்பதற்காக பொறுப்பளிக்கப்பட்ட திணைக்களம்சார் நிறுவனங்கள் மாவட்டத்தில், மாகாணத்தில் மற்றும் தேசிய மட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட சம்பவங்களின் தரவுத் தளம் ஒன்றைக் கொண்டிருக்கவில்லை.
- மேலதிகமாக, வீட்டு வன்முறைச் சம்பவங்களின் அதிகரிப்பை பெருந்தொற்றிற்கு முன்னரும், பின்னரும் ஒப்பீடுவதற்கு அடிப்படையில் உறுதியான தரவுகளின் பற்றாக்குறையானது ஏனெனில் தேசிய ஆய்வுகள் இல்லாததாலும் மற்றும் மோசமாக பராமரிக்கப்பட்ட பொலிஸ் மற்றும் வைத்தியசாலை அறிக்கைகளும் காரணமாக இருக்கலாம்.



### 5. ஒட்டுமொத்த உட்கட்டமைப்பு கொவிட்-19இன் பால்நிலை அடிப்படையிலான தாக்கத்தை கையாள்வதற்கு உகந்ததாக இல்லை

- தற்போதுள்ள முறைமைகள் மற்றும் நிறுவனங்களில் வன்முறை என்பது சாதாரணமாக்கப்பட்டுள்ளது. கலாசார மற்றும் சமூகம்சார் விழுமியங்களின் காரணமாக வன்முறை குறித்து அறிக்கையிடல் என்பது களங்கமானதாக்கப்பட்டுள்ளது. எனவே, ஒட்டுமொத்த முறைமைகளும் பால்நிலை அடிப்படையிலான விடயங்களுக்கு கூருணர்வற்றுக் காணப்படுகின்றது.
- இந்த ஒட்டுமொத்த நிலைமைகள் பின்வரும் பகுதிகளில் அவதானிக்கப்பட்ட கடுமையான குறைபாடுகளின் காரணமாகக் கொண்டிருக்கலாம்:
  - உயர்மட்டத்தில் பால்நிலை அடிப்படையிலான விடயங்களின் அங்கீகாரம்.
  - சேவை வழங்கல் அடிப்படையில் துறைகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு.
  - பால்நிலை அடிப்படையிலான கூருணர்வு குறித்து பயிற்சியளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் அனைத்து மட்டங்களிலும் இயலுமை
  - தீர்மானம் எடுக்கும் நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம்
  - வீட்டு வன்முறைச் சம்பவங்களில் நீதிமன்ற உத்தரவுகளின் நடைமுறைப்படுத்தலை மேற்பார்வை செய்வதற்கான ஒரு கண்காணிப்பு அமைப்பு.



## 1.3 துறைசார் குறைபாடுகள்:

வீட்டு வன்முறையைத் தடுத்தல் மற்றும் வீட்டு வன்முறையில் இருந்து பாதுகாத்தலில் ஈடுபடும் பல்வேறு துறைகள் உள்ளன. அடையாளம் காணப்பட்ட இந்தத் துறைகளில் உள்ள குறைபாடுகளை இந்தப் பிரிவு சுட்டிக்காட்டுகின்றது.



### 1. பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள் அமைச்சு

மகளிர் விவகாரங்கள் தொடர்பான தேசிய அமைப்பின் பிராந்திய அங்கங்களை பெண்கள் தொடர்பான தேசிய குழு மற்றும் பெண்கள் பணியகம் என்பன கொண்டுள்ளது.

- இந்த அங்கங்களுக்குப் போதியளவு மேற்பார்வை மற்றும் நிதியிடல் இன்மையால், இந்த அமைப்பின் ஒட்டுமொத்த பயனுறுதித்தன்மையை (அவசர உதவிச் சேவைகள் உள்ளடங்கலாக) மதிப்பீடு செய்ய முடியாதுள்ளது.
- ஏனைய குறைபாடுகளில் உள்ளடங்கும் பற்றாக்குறை:
  - கொள்கை - பெண்கள் தொடர்பான தேசிய குழுவினால் அதிகாரம் வழங்கல்.
  - சட்ட மற்றும் தீர்மானம் எடுக்கும் இயலுமை.
  - பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசரகால உதவியை வழங்குவதற்கான நிதி மற்றும் வளங்கள். உ-ம்: பாதுகாப்பான இல்லங்கள்.



### 2. நீதித் துறை

- வீட்டு வன்முறையைத் தடுப்பதற்கான சட்டம் “வீட்டு வன்முறை” என்பதற்கு ஒரு குறுகிய வரைவிலக்கணத்தைக் கொண்டுள்ளதால் இச் சட்டத்தினால் பயன் பெற்றுக்கொள்ளக்கூடிய பாதிக்கப்பட்டவர்களை உள்ளடக்கும் பல குழுக்கள் விலக்கி வைக்கப்படுகின்றன.
- எடுத்துக்காட்டாக, இதுவரை திருமணத்திற்குப் பின்னரான பாலியல் துஷ்பிரயோகம் என்பது குற்றமாக்கப்படவில்லை. இதனால் அத்தகைய வடிவ வன்முறையில் பாதிக்கப்பட்டவர்கள் பாதுகாப்புப் பெறுவதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனர்.
- பாதுகாப்பு உத்தரவுகளின் இசைவுத் தன்மை மற்றும் அமுலாக்கலை உறுதி செய்வதற்கான கண்காணிப்பு முறைமையை வீட்டு வன்முறையைத் தடுப்பதற்கான சட்டம் வழங்குவதில்லை.
- மேலும், இடைக்காலப் பாதுகாப்பு உத்தரவுகளைப் பெறுவதில் குறிப்பிடத்தக்க தாமதம் உள்ளது.
- பெருந்தொற்றின் போது நீதிமன்றங்கள் மூடப்பட்டமையானது சட்டச் செயற்பாடுகள் நிறுத்தப்படுவதற்கு காரணமாகின. நீதிமன்ற முறைமையின் சீரான செயற்பாட்டுக்கான இந்தத் தடைகள், நியாயமான கால எல்லைக்குள் வீட்டு வன்முறைச் சம்பவங்களில் நிவாரணம் பெறுவதற்கு பாதிக்கப்பட்டவர்களுக்கான சாத்தியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.



- மேலும், நீதிபதிகள், சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்ற உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக நீதிமன்ற அலுவலர்கள் மத்தியில் வீட்டு வன்முறைச் சம்பவங்களைக் கையாள்வதில் கூருணர்வின்மையானது, பாதிக்கப்பட்டவர்களைத் தொடர்ந்தும் சிக்கலான நிலைக்கு உள்ளாக்குகிறது.



### 3. அமுலாக்கல் துறை

- வீட்டு வன்முறையின் முதலாவது தொடர்புப் புள்ளியாக பொலிஸ் உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர். எவ்வாறாயினும், இவற்றில் பெரும்பாலான பொலிஸ் பிரிவுகள் பால்நிலை அடிப்படையிலான விடயங்களைக் கையாள்வதற்கு கூருணர்வு உள்ளதாக்கப்படவில்லை. முறைப்பாடுகளுக்கான அவர்களது பதில்கூறல்கள், பாதிக்கப்பட்டவர்கள் மேலதிக பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு வழியமைத்தன.

- எடுத்துக்காட்டாக, வீட்டு வன்முறை தொடர்பான முறைப்பாடுகளை பொலிஸார் தவறாகக் கையாள்கின்றனர். முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு வன்முறைக்கு உட்படுத்தியவர்களுடன் இணக்கப்பாட்டில் ஈடுபடுவதற்கு பாதிக்கப்பட்டவர்கள் பலவந்தப்படுத்தப்படுகின்றனர்.

- மேலும், பெருந்தொற்றின் போது விதிக்கப்பட்ட தீவிரமான முடக்க விதிகளின் காரணமாக, பொலிஸ் நிலையத்திற்கான அணுகும் வசதியை பெண்கள் கொண்டிருக்கவில்லை என்பதுடன், உதவிக்கான அவர்களது அழைப்புக்கும் பதில் கிடைக்கவில்லை.

- முறைமையின் ஒட்டுமொத்த வினைத்திறன் இன்மைக்கு பிரதான காரணிகளாக, குறிப்பாகப் பெருந்தொற்றின் போது பின்வரும் விடயங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன:
    - அவசர உதவிச் சேவைகளையும், தொலைபேசி இலக்கங்களையும் பாதிக்கப்பட்டவர்கள் அடைய முடியாமையால், பொலிஸ் பிரிவுகள், பெண்கள் மற்றும் சிறுவர் உதவிப் பிரிவுகள் ஒழுங்காகச் செயற்படவில்லை என்பதுடன், போதியளவு வளங்களும் காணப்படவில்லை.
    - அமுலாக்கல் பிரிவுகளில் இயலுமை, வினைத்திறன், அர்ப்பணிப்பு மற்றும் பெண் பிரதிநிதித்துவம் என்பவற்றில் பற்றாக்குறை இருந்தன.



### 4. சுகாதாரத் துறை

- வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலாவது தொடர்பு புள்ளிகளாக சுகாதாரத் துறையைச் சேர்ந்த நபர்களும் உள்ளனர். எவ்வாறாயினும், சுகாதாரத் துறைக்குள் பால்நிலைசார் கூருணர்வாக்கல் பற்றாக்குறையும் உள்ளது.

- உதாரணமாக, பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் சாத்தியமான அறிகுறிகள்/வடிவங்கள் மற்றும் குறிப்பாக நோயாளிகளைக் கையாளும் போது வீட்டு வன்முறைச் சம்பவங்களை அடையாளம் காண்பதற்கு உத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்படவில்லை. இதனால், பாதிக்கப்பட்டவர்களுக்குப் பொருத்தமான உதவியை வழங்குவதற்குத் தவறுகின்றனர்.



- வீட்டு வன்முறையில் பாதிக்கப்பட்டவர்கள் தமது அனுபவங்களைப் பகிர்வதற்காக பொது வைத்தியசாலைகளில் உள்ள பாதுகாப்பான இடமான, மித்துரு பியசவிற்கு அவசர தொலைபேசி இலக்கம் இல்லை. எனவே, துஷ்பிரயோகச் சம்பவங்களை முறைப்பாடு செய்வதற்கு பாதிக்கப்பட்டவர்கள் நேரடியாக வைத்தியசாலைகளுக்கு செல்ல வேண்டும்.

- மேலதிகமாக, மித்துரு பியச என்பது வைத்தியசாலைகளில் ஒதுக்குப்புறமாக அல்லது தனியான பகுதிகளில் அமைந்திருப்பதில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கான அந்தரங்கப் பாதுகாப்பு மற்றும் இரகசியத்தன்மை இன்மை என்பன காரணமாக உதவி நாடுவதற்கான அவர்களது தீர்மானம் பாதிக்கப்படுகின்றது.

## 2. பரிந்துரைகள்

### 2.1. நீண்ட கால சீர்திருத்தங்கள்



#### 1. மகளிர் விவகாரங்கள் தொடர்பான தேசிய பொறியமைப்பு

- பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள் அமைச்சினைச் சுதந்திரமான அமைச்சரவை அமைச்சாக முன்னேற்றல்.
- பால்நிலைப் பொறுப்புணர்வுள்ள தேசிய வரவுசெலவுத் திட்ட வரைபடமாக்கலைப் பெற்று, நடைமுறைப்படுத்தல்.



#### 2. பெண்கள் தொடர்பான தேசிய குழு மீதான சட்ட அந்தஸ்தை வழங்குதல்

- **பெண்கள் தொடர்பான தேசிய குழு**வுக்குச் சட்ட அதிகாரத்தை வழங்குதல். அத்துடன், ஏனைய திணைக்களங்களில் உள்ள அனைத்துப் பால்நிலை அடிப்படையிலான பிரிவுகளுக்குமான பிரதான மையப் புள்ளியாக பணியாற்றும் வகையில் **பெண்கள் தொடர்பான தேசிய குழு**வின் கட்டளையைப் பரவலாக்கல்.

- **பெண்கள் தொடர்பான தேசிய குழு**வுக்குள் ஆய்வுப் பிரிவு மற்றும் கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைத்தல் பிரிவு என 2 துணைப் பிரிவுகளை நியமித்தல்.

- கொள்கை வகுத்தல், தரவு சேகரித்தல் மற்றும் ஆய்வு, முறைமை மீளாய்வு மற்றும் திணைக்களங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு உள்ளடங்கிய பொறுப்புக்களை எடுப்பதற்கு **பெண்கள் தொடர்பான தேசிய குழு**வின் பொறுப்புக்களைப் பரவலாக்கல்.

- சட்டக் கட்டளையின் ஊடாக சட்ட உதவியைப் பெறுவதற்கு நலன்களைக் கவனத்தில் எடுத்தல் மற்றும் உளச்சமூக ஆதரவு, பொருளாதார வலுவூட்டலுக்கான சந்தர்ப்பங்கள் மற்றும் வழிகள் உள்ளடங்கலாக பாதிக்கப்பட்டவர்களுக்கு வசதிகளை வழங்கல்.



### 3. செய்தியிடல், திறன் கட்டியெழுப்பல், பால்நிலை அடிப்படையிலான கூருணர்வுப் பயிற்சி மற்றும் அதிகார நிலையில் பெண்களின் பிரதிநிதித்துவம் என்பவற்றை அதிகரித்தல்

- வீட்டு வன்முறை தொடர்பான விடயங்களை அறிக்கையிடுதல் தொடர்பில் ஊடக வழிகாட்டிகளை மறுசீரமைத்தல்.
- வீட்டு வன்முறை மற்றும் அது தொடர்பாக உதவி பெறுவதற்குப் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ள தெரிவுகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு சமூக நிலைப் பணியாளர்கள் மற்றும் கிராமமட்ட சிவில் சமூக நிறுவனங்களுடன் இணைந்து செயற்படல்.
- பால்நிலை அடிப்படையிலான கூருணர்வுப் பயிற்சி நிகழ்ச்சிகளை முன்னெடுப்பதன் மூலம் உத்தியோகத்தர்களை கூருணர்வு உள்ளவர்களாக்குதல்.
- பாடசாலைகள், சமுதாய மட்டங்களில் மற்றும் கல்லூரிகளில் பால்நிலை அடிப்படையிலான நேரான எண்ணங்கள் தொடர்பான செய்தியிடலை நடைமுறைப்படுத்தல்.
- வேறுபட்ட துறைகள் அல்லது நிறுவனங்களில் அதிகமாகப் பெண் உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்ளல்.



### 4. 2005ஆம் ஆண்டின் வீட்டு வன்முறையைத் தடுப்பதற்கான சட்டத்தைத் திருத்துதல்

- வீட்டு வன்முறையைத் தடுப்பதற்கான சட்டத்துக்குப் பொருத்தமான திருத்தங்களை நிறைவேற்றுவதற்கு ஆதரவு நாடல்.
- தண்டனைச் சட்டக் கோவையில் பட்டியலிடப்பட்டுள்ள குற்றங்களுக்குள் வீட்டு வன்முறையைத் தடுப்பதற்கான சட்டத்தைச் சேர்த்துப் பொருள் கொள்ளாமல்/குறுகிய வரையறைக்குட்படுத்தாமல் வீட்டு வன்முறை தொடர்பான வரைவிலக்கணத்தைப் பரவலாக்கல்.
- பின்வருவனவற்றை உட்சேர்ப்பதற்கு வீட்டு வன்முறையைத் தடுப்பதற்கான சட்டத்தின் மாதிரியை மாற்றியமைத்தல்:
  - *பாதிக்கப்பட்டவர்களுக்கு அரச பொறுப்புகளை உள்ளடக்கி, தெளிவாக விளக்கல்*
  - *பாதிக்கப்பட்டவர் சார்பில் நடவடிக்கை எடுப்பதற்கு அரசுக்கு அதிகாரமளித்தல் (ஏனைய நீதிமுறைமைகளைப் போன்று)*
  - *பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் வழக்கு நடவடிக்கைகளை முன்டுெப்பதற்கு பிரதிநிதிகளுக்கு அனுமதியளித்தல்*
  - *வீட்டு வன்முறைச் சம்பவங்களை விசாரிப்பதற்கு துரிதமாகக் கண்டறியும் செயற்பாட்டு முறைமை ஒன்றை அறிமுகப்படுத்தல்*
  - *இடைக்கால உத்தரவுகளுக்கான விண்ணப்பங்கள் விண்ணப்பிக்கப்படுவதற்கும், விநியோகிக்கப்படுவதற்கும் தெளிவான கால வரையறையை நியமிக்கவும்*
  - *இச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் அனைத்து வடிவிலான நீதிமன்ற உத்தரவுகளையும் கண்காணிக்கும் பிரிவு ஒன்றை உள்ளடக்கவும் மற்றும்*



- *நீதிமன்றத்தால் வழங்கப்படும் பாதுகாப்பு உத்தரவுகள் மற்றும் துணை உத்தரவுகளின் நடைமுறைப்படுத்தலை கண்காணிப்பதற்கு, மேற்பார்வை செய்வதற்கு மற்றும் மீளாய்வு செய்வதற்கு சுயாதீன அங்கம் ஒன்றை உருவாக்கல்.*



## 5. ஆய்வு செய்தல் மற்றும் பதிவுகள்

- வீட்டு வன்முறைச் சம்பவங்களின் போக்குகளையும், வீட்டு வன்முறையைத் தடுப்பதற்கு உதவிய அல்லது தவறிய மூலோபாயங்களையும் அடையாளம் காண்பதற்கு முறைசார் ஆய்வினை முன்னெடுத்தல்.
- வீட்டு வன்முறைச் சம்பவங்களை ஆவணப்படுத்தும் ஆதார அடிப்படையிலான தரவுத் தளத்தை உருவாக்கல்.
- வெற்றியளித்த அல்லது தவறிய வீட்டு வன்முறை மற்றும் மூலோபாயங்களின் போக்குகள் தொடர்பான அனுபவத் தரவுகளை விரிவுபடுத்துவதற்கு தேசிய மட்ட ஆய்வுகளை முன்னெடுத்தல்.
- ஒவ்வொரு மாவட்டத்திலும், மாகாணத்திலும், தேசிய மட்டத்திலும் அறிக்கைப்படுத்தப்பட்ட வீட்டு வன்முறைச் சம்பவங்களின் தரவுத்தளம் ஒன்றைப் பேணுதல். உதவிச் சேவைகள் ஊடாகப் பெறப்பட்ட வீட்டு வன்முறை அழைப்புகள் தொடர்பான தகவல்களும், காலப்போக்கில் இது தொடர்பில் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கைகளும் இதில் உள்ளடக்கப்படல் வேண்டும்.



## 2.2 குறுகிய கால திருத்தங்கள்



### 1. பெண்கள் அமைச்சு

- பின்வரும் கடமைகள்/பொறுப்புக்களை முன்னெடுப்பதற்கான செயலேற்பாடுகளை **பெண்கள் தொடர்பான தேசிய குழு** நடைமுறைப்படுத்தல் வேண்டும்.
- பயிற்றப்பட்டவர்களுடன், வீட்டு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான அறிக்கைகள் அல்லது அழைப்புக்களைப் பெறுவதற்கான மும்மொழிச் சேவைகளுடன் 24-மணி நேர உதவிச் சேவையை தொடர்ந்து செயற்படுத்தல்.
- முறைமையின் வினைத்திறனை உறுதி செய்வதற்கு தரவினை பதிவு செய்தல் மற்றும் பருவகால மீளாய்வுகளை முன்னெடுத்தல்.
- சேகரிக்கப்பட்டத் தரவு மற்றும் பருவகால மீளாய்வுகளில் இருந்ததான முடிவுகளின் அடிப்படையிலான முறைமையில் குறைபாடுகள் அல்லது இடைவெளிகளை அடையாளம் காணல் மற்றும் அடையாளப்படுத்தலை நோக்கிச் செயற்படல்.
- பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கு ஏனைய கொள்கை மட்ட இடையீடுகளைச் செய்தல்.
- பயன்படுத்தப்படாத கட்டிடங்களில் தற்காலிக பாதுகாப்பான இல்லங்களை உருவாக்குவதனை நோக்கி வளங்களை வழிநடத்துதல்.



### 2. நீதித் துறை

- வீட்டு வன்முறை சம்பந்தப்பட்ட விடயங்களை விசாரிப்பதற்கு தனியான நீதிமன்றம் ஒன்றை அமைத்தல்.
- வீட்டு வன்முறைச் சம்பவங்களை உடனடியாக தீர்வுகாணப்பட வேண்டிய விடயமாக வகைப்படுத்துதல் மற்றும் நீதிமன்றங்கள் மூடப்படும் சந்தர்ப்பங்களில் இலத்திரனியல் தளங்கள் மூலமான விசாரணைகளை அனுமதிப்பதன் மூலம் கால தாமதங்களைத் தவிர்த்தல்.
- நீதித்துறையில் உள்ள நீதிபதிகள், சட்டத்தரணிகள் மற்றும் ஏனைய நீதிமன்ற உத்தியோகத்தர்களை பால்நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பில் கூருணர்வு உள்ளவர்கள் ஆக்குவதற்கான பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை முன்னெடுத்தல்.
- வீட்டு வன்முறை தொடர்பான விடயங்களின் அவசர நிலையை அறிந்துகொண்டு, பாதுகாப்புக் கட்டளைகளின் விரைவான நடைமுறைப்படுத்தலைக் கண்காணித்தல்.
- வீட்டு வன்முறைச் சம்பவங்களை அடையாளப்படுத்துவதற்கு விரைவாகக் கண்டறிவதற்கான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.






### 3. அமுலாக்கல் துறை

- பால்நிலை அடிப்படையிலான வன்முறை சார்ந்த விடயங்கள் தொடர்பில் பொலிஸாரைக் கூருணர்வுடன் செயற்படக் கூடியவர்களாக்குதல்.
- பொலிஸாருக்குப் பால்நிலை மற்றும் உளச்சமூக விடயங்கள் தொடர்பான பயிற்சிகளை வழங்கல்.
- இந்தத் துறையில் பணியாற்றுபவர்களின் இயலுமை மற்றும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல்.
- முறைப்பாட்டின் பின்னரான தொடர் கவனிப்பு மற்றும் வீடு சந்திப்புக்களை உறுதி செய்தல்.
- பாதிக்கப்பட்டவர்களின் இரகசியத்தன்மையை உறுதி செய்தல்.
- பெறப்பட்ட அழைப்புக்கள் தொடர்பில் பருவகால அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் மற்றும் அறிக்கைப்படுத்தப்பட்ட வீட்டு வன்முறைச் சம்பவங்களில் தீர்க்கப்படாதவை ***பெண்கள் தொடர்பான தேசிய குழு***வின் ஆய்வுப் பிரிவுக்கு அனுப்பிவைக்கப்படுவதனை உறுதி செய்தல்.
- மும்மொழிகளிலும் சேவை வழங்கும் அவசர உதவிச் சேவைகளை முன்னெடுத்தல் மற்றும் உதவிக்காக் மேற்கொள்ளப்படும் அழைப்புக்களை தொடர் கவனிப்பு செய்தல்.
- 24 மணிநேரமும் ஊழியர்கள் இருக்கக் கூடியதாக மகளிர் மற்றும் சிறுவர் உதவிப் பிரிவுகள் செயற்படுவதனை உறுதி செய்தல்.




### 4. சுகாதாரத் துறை

- சுகாதாரத் துறை உத்தியோகத்தர்களை வீட்டு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக கூருணர்வுடன் செயற்படக் கூடியவர்களாக்குதல் மற்றும் இந்தத் துறைக்குள் பணியாற்றுபவர்களின் இயலுமையை அதிகரித்தல்.
- பாதிக்கப்பட்டவர்களின் இரகசியத் தன்மையை உறுதி செய்வதற்கு வைத்தியசாலைகளில் தனியான பகுதிக்கு மித்துரு பியச நிலையங்களை இடமாற்றல்.
- ஏனைய துறைகளுடனும், ***பெண்கள் தொடர்பான தேசிய குழு***வின் கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவுடனும் மித்துரு பியச நெருக்கமாக இணைந்து செயற்படுவதனை உறுதி செய்தல்.
- பாதிக்கப்பட்டவர்கள் வைத்தியசாலைக்கு நேரடியாகச் செல்லாது தொலைவில் இருந்தே சேவையைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக மித்துரு பியசவிற்கு அவசர உதவி அழைப்பு சேவை ஒன்றை உருவாக்கல்.



### 5. சேவை வழங்குநர்களுக்கான அதிகரித்த அணுகல்

- பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பில் சேவை வழங்குபவர்களுக்கு பொது முடக்கத்தின் போது விதிமுறைகளைத் தளர்த்தல்.
- நடைமுறையிலுள்ள உட்கட்டமைப்பு மற்றும் பொறியமைப்புக்களில் முதலீடு செய்தல். பாதிக்கப்பட்டவர்கள் சேவை வழங்குநர்களுடன் இணைவதற்கான மேலதிக இணையதள மூலமான வசதிகளை ஏற்படுத்தல். உதாரணமாக, அவசர உதவி அழைப்புச் சேவைகளை உருவாக்குதல்.
- ஆற்றுப்படுத்தல் முறையை சீரமைத்தல். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உதவியைப் பெறுவதற்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு சுழற்சி முறையில் சேவைகள் கிடைக்கக் கூடியதாக இருப்பதனை உறுதி செய்தல்.
- அதிகாரிகள் மற்றும் முதலாவது தொடர்புப் புள்ளிகளுக்கு முழுமையான பால்நிலை கூருணர்வுப் பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை வழங்கல்.
- ஒவ்வொரு முதலாவது தொடர்பு புள்ளிகளிலும் அவசர உதவி அழைப்புச் சேவைகளைச் செயற்படுத்தல்.
- உதவிக்காக உள்ளூரில் வீட்டு வன்முறை தொடர்பாக வெளிப்படுத்தி உதவி பெறுவதற்கான சைகை முறையிலான குறியீடு ஒன்றை வடிவமைத்தல். சமூக ஊடகம், துண்டு பிரசுரங்கள், தொலைக்காட்சி விளம்பரங்கள் ஊடாக குறித்த சைகை முறையிலான குறியீடு தொடர்பான விழிப்புணர்வை அதிகரித்தல்.



சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம்
16/1, மொரிஸ் வீதி, கொழும்பு 5, இலங்கை
+94 11 2055404
www.cejsrilanka.org | srilanka.cej@gmail.com
/Centre-for-Equality-and-Justice
/CEJ_SriLanka
/cej_srilanka
/channel/CEJ Sri Lanka